சாலையை அமைக்கலாம் என்று பரிந்துரை தந்திருக்கிறார்கள். இதுசம்பந்தமாக, சம்பந்தப்பட்ட Project Officer *அவர்களுக்கு மாநில அரசாங்கத்தின் மூலமாகக் கடிதம் எழுதியிருக்கிறோம். ஆகையால், அந்தக் கடிதத்திற்குப் பதில் வந்தவுடன், அந்தத் திட்டங்களை எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 124, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பிரபாகரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

124—

அலுவலகக் கட்டடம்

***15863—திரு. ம. பிரபாகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் தொகுதி, ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியம், செட்டிகுளம் ஊராட்சி மன்ற அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் தொகுதி, ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியம், செட்டிகுளம் ஊராட்சியில் ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ள ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடம் நல்ல நிலையில் உள்ளது. எனவே, புதிய கட்டடம் கட்டும் தேவை எழவில்லை.

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பிரபாகரன் அவர்கள்.*

திரு. ம. பிரபாகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். பெரம்பலூர் மாவட்டம், பாடாலூரில் புதியதாக 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பால் பொருட்கள் தயாரிக்கும் ஆலை அமைக்க அனுமதி வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. ஆ. ராசா அவர்களுக்கும், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாவட்ட அமைச்சரான போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களுக்கும், பெரம்பலூர் மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

TRUTH ALONE TRIUMPHS

2022 ஏப்ரல் 19]

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் ஒன்றியம், செட்டிகுளம் ஊராட்சி என்பது கிட்டத்தட்ட 10 ஆயிரம் மக்கள் வசிக்கும் ஊராட்சி. அந்த ஊராட்சி மன்ற அலுவலகம் என்பது 1991 ஆம் ஆண்டு கட்டப்பட்ட கட்டடம் ஆகும். கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட சிறிய கட்டடம், அது பழுதடைந்துள்ளது. மழைக் காலங்களில் கசிவு ஏற்படுகிறது. எனவே, இட நெருக்கடி காரணமாகவும், பழுதடைந்திருக்கின்ற காரணத்தினாலும், அந்தக் கட்டடம் ஒரு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள காரணத்தினாலும், பொதுமக்கள் வரி செலுத்துவதாக இருந்தாலும், e–சேவையைப் பயன்படுத்துவதாக இருந்தாலும் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, பொதுமக்களின் நலன் கருதி செட்டிகுளம் ஊராட்சியின் மையப் பகுதியில் புதிய ஊராட்சி மன்றக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கூறிய அந்த ஊராட்சியில் கடந்த 1990–1991 ஆம் ஆண்டில் வேலை உறுதித் திட்டம் மூலமாக அந்தப் பஞ்சாயத்து அலுவலகம் கட்டப்பட்டிருக்கிறது. மேலும், 2018–2019 ஆம் ஆண்டுகளில் அதனைப் பழுது நீக்குவதற்காக 75,000 ரூபாய் செலவிலே 14–வது ஒன்றிய நிதிக் குழுவின் மானியத்தின் மூலமாகப் பழுது நீக்கப்பட்டு, ஓரளவு நல்ல நிலையில் இருப்பதாகத்தான் துறையிலிருந்து வந்த தகவல்கள் தெரிவிக்கின்றன. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கட்டடம் அவசியம் வேண்டும் என்றும், அது ஏறத்தாழ 8,000, 9,000 மக்கள் வாழ்கின்ற ஊர் என்றும் அவர் குறிப்பிட்டுச் சொல்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், கிராம மக்களுக்கு அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் உறுதியாக இருக்கிறார். அதிலும், குறிப்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், அங்கிருந்து அவர்களுடைய அலுவலகப் பணிகளை செய்திட வேண்டும், அதற்கேற்ற வசதிகளை செய்து தர வேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்து இல்லை. ஆகவே, அந்த அடிப்படையில் சென்ற ஆண்டுகூட துறையின் மூலமாக 550 ஊராட்சி மன்றங்களுக்கு புதிய கட்டடங்கள்*

கட்டுவதற்கான அறிவிப்பு செய்யப்பட்டு, அவை இப்போது நடைமுறையில் இருக்கின்றன. இந்த ஆண்டும் புதிய கட்டடங்கள் கட்டுவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே நினைவுபடுத்தியிருக்கிறோம். புதிய கட்டடங்களுக்கு அனுமதி கிடைக்கின்ற நேரத்தில் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பிரபாகரன் அவர்கள்.*

திரு. ம. பிரபாகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெரம்பலூர் மாவட்டம், 4 ஒன்றியங்களாக உள்ளது. அதில், பெரம்பலூர் ஒன்றிய அலுவலகம் 1962 ஆம் ஆண்டிலும், ஆலத்தூர் ஒன்றிய அலுவலகம் 1976 ஆம் ஆண்டிலும் கட்டப்பட்ட மிகவும் பழமை வாய்ந்த கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே, புதிய அலுவலகம் கட்டுவதற்கு அதே வளாகத்தில் இட வசதியுள்ளது. எனவே, பழைய கட்டடத்தில் இயங்கும் பெரம்பலூர், ஆலத்தூர் ஒன்றிய அலுவலகங்களுக்கு நவீன வசதிகளுடன்கூடிய புதிய ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டித் தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களுக்கான அலுவலகக் கட்டடங்களைப்போல, ஒன்றியங்களுக்கான அலுவலகக் கட்டடங்களைக் கட்டுவதிலும் இந்த அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு 15 ஊராட்சி ஒன்றியங்களுக்கான புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான அனுமதி கிடைத்து, அவற்றுக்கான பணிகள் இப்போது தொடங்கியிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கின்ற அந்தக் கோரிக்கையின் அடிப்படையில், தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 388 ஊராட்சி ஒன்றிய கட்டடங்களில் 187 கட்டடங்கள் புதியதாக கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 41 கட்டடங்கள் நல்ல நிலையில் உள்ளன. மீதமுள்ள 160 கட்டடங்களில், 33 புதிய கட்டடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இரண்டு புதிய கட்டடங்களுக்கு*

2022 ஏப்ரல் 19]

அனுமதி வழங்கப்பட்டு இடப் பற்றாக்குறையினால் பணி தொடங்கப்படாமல் உள்ளது. இதற்கு புதிய வடிவமைப்பு மற்றும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது 56 புதிய கட்டடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் 2021-2022 மற்றும் 2022-2023 ஆம் ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட (15+20=35) கட்டடங்களும் அடங்கும். தமிழ்நாட்டிலுள்ள 388 ஊராட்சி ஒன்றிய கட்டடங்களில் எதிர்காலத்தில் 69 கட்டடங்கள்தான் புதியதாக கட்ட வேண்டியதிருக்கும். ஏறத்தாழ 388 ஊராட்சி ஒன்றியங்களுக்கான கட்டடங்களில் ஏறத்தாழ 80 கட்டடங்கள்தான் இன்னும் பழைய கட்டடங்களாக இருப்பதாக அறிய வந்திருக்கிறது. அவற்றில் 69 கட்டடங்கள்தான் எதிர்காலத்தில் புதுப்பிக்கப்பட வேண்டியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 125, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

125—

மின்மாற்றி

***3681—திரு. எஸ். சுதர்சனம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், ஆங்காடு ஊராட்சி, பஜனைக் கோயில் தெருவில் உள்ள மின்மாற்றியை புதிதாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், ஆங்காடு ஊராட்சி, பஜனைக் கோயில் தெருவிற்கு 250 கே.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிமூலம் 120 மின்னிணைப்புகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. சீரான மின் விநியோகத்திற்காக அப்பகுதியில் கூடுதலாக ஆங்காடுகுளத்தில் 100 கே.வி.ஏ. திறன் கொண்ட ஒரு புதிய மின்மாற்றி 9–3–2022 அன்று நிறுவப்பட்டு, நுகர்வோரின் பயன்பாட்டிற்காகக் கொண்டுவரப்பட்டு, மேற்கூறிய